3rd November 1966] [செ. மாதவன்]

ஜுடிஷியல் ஸெபரேஷன் போன்ற பல விளைவுகள் இருக்கின்றன. ஸக்ஸெஷன் மட்டும் தான் இருக்கிறது, ஆகவே வேண்டாம் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்காது.

என்னுடைய சட்டத்திலே 'ஸெரிமனி' என்பதற்கு விளக்கம் இல்லை என்று சொன்னார்கள். ஏழாவது பிரிவிலே எக்ஸ்பிளனேஷன் கொடுத்திருக்கிறேன். சுயமரியாதைத் திருமண முறைகள் பல என்ற சந்தேகம் ஏற்பட்டால் ஆட்சேபணை ஏற்பட்டால் அதற்காக எக்ஸ்பிளனேஷன் கொடுத்திருக்கிறேன். ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு வைத்துக் கொள்ளலாம். ஆகவே, 7-வது பிரிவிலே வரும் திருமணங்களை 8-வது பிரிவிலே ரிஜிஸ்ட்ரேஷன் செய்யலாம் என்று கொடுத்திருக்கிறேன். அதைப் பற்றிச் சந்தேகம் வரவேண்டியதில்லை. இருக்கிற சட்டத்திலே 7-வது பிரிவிலே கஸ்டமரி ரைட்ஸ் அன்ட் ஸெரிமனீஸ் என்று பொதுவாகச் சொல்லி விட்டார்கள். அதை நீதி மன்றம் தீர்மானித்துக் கொள்ளலாம் என்று விடப்பட்டிருக்கிறது. இருக்கிற சட்டத்தில் "Which will include the ceremonies performed in Suyamariyathai or Seerthirutha marriages" என்று இருக்கிறது. எந்த ஸெரிமனியாக இருந்தாலும் சுயமரியாதைத் திருமணம், பின்பற்றக் கூடிய முறையில் எந்த முறையில் சேர்ந்தது என்று கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஸ்பெஷல் மாரேஜுக்குப் போங்கள், அந்த ஆக்டைப் பார்த்துக் கொள்ளுங்கள், ஸக்ஸெஷன் ஆக்டைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுவது பொருந்தாது என்று சொல்லக் காரணம் இது தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. தமிழ் நாட்டில்தான் தொன்று தொட்டு இருக்கிறது. தமிழ்நாட்டில்தான் ஆரிய எதிர்ப்புப் போராட்டம், புரோகித மறுப்புப் போராட்டம் நடந்தது. இந்தக் காரணங்களினால் இந்தச் சட்டம் இன்றியமையாதது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Hindu Marriage (Madras Amendment) Bill, 1965 (L.A. Bill No. 40 of 1965) be taken into consideration."

The motion was put and lost.

V—BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I have received information that there is likely to be a very strong gale. I have also received information from my house that the peon is not able to get out of the house to get food for me. The gale is getting strengthened every minute. Therefore, I would like to adjourn the House now to meet again tomorrow.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, புயல் வருவதை முன்னிட்டு சபையை ஒத்திவைப்பதை ஒத்துக்கொண்டாலும் ஒரே ஒரு வேண்டுகோளைச் சொல்லிக்கொள்ளுகிறேன். இப்போது நான்-அஃபிஷியல் டே முழுவதும் முடியாமல் இருக்கிற

காரணத்தினல், உணவு நெருக்கடி, சேலம் இரும்பாலை ஆகியவை கள் பற்றிய தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிற காரணத்தினல், போன சட்ட சபைக் கூட்டத் தொடரின்போது நான்-அபிஷியல் டே இல்லாத காரணத்தினல், அருள் கூர்ந்து பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியைக் கூட்டி இன்னெரு நாள் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, சப்ளிமென்ட்டரி டிமான்ட்ஸுக்கு ஒரு நாள் வைத்திருக்கிறோம். முடிந்தால் அஃபிஷியல் பில்ஸ் எடுத்துக் கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். நான் சொல்லுவது, சப்ளிமென்ட்டரி டிமாண்டுக்குள் வராவிட்டாலும்கூட, சேலம் உருக்காலை பற்றி, உணவு நெருக்கடி பற்றி, நிலவரி பற்றிப் பேசலாம். இரண்டு, மூன்று மணி நேரம் பேசி ஓட்டு எடுக்கலாம். இன்றைக்குப் பேச முடியாததை அப்போது பேசலாம். ஸ்பெஷலாக, 'பை அக்ரிமென்ட்' பேசலாம். இப்போதே இரண்டு மணி நேரம்தான் பாக்கியிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் குறிப்பிடுகிறபடி இப்போது இந்த மன்றம் முடிவுறுகிற அத்தகைய சூழ்நிலை ஏற்படுமானல், இப்போது மேலும் பல தீர்மானங்கள் இருக்கிற காரணத்தினலும், இந்தத் தொடரே கடைசியாக இருக்கிற காரணத்தினலும், சப்ளிமென்ட்டரி டிமாண்ட்ஸ் விவாதத்திற்கு வருகிறபோது வேறு பல பிரச்னைகள் பேச வேண்டியிருப்பதாலும், பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் கூறியது போல 9-ம் தேதியும் சட்ட சபை கூடி தீர்மானங்களை வைத்துக்கொள்ளுகிற சூழ்நிலை ஏற்படுமானல், மற்றைய திட்டங்களைத் தொடர்ந்து நடத்திக் கொள்ளலாம். ஒன்பதாம் தேதி தொடர்ந்து இந்தத் தீர்மானங்களைப் பற்றி விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். எட்டாம் தேதி திட்டப்படி நடத்திக்கொள்ளலாம். இப்போது இரண்டு மணி நேரம்தான் பாக்கி இருக்கிறது ஒன்பதாம் தேதி இரண்டு மணி நேரம் வைத்துக்கொள்ளலாம். அன்றைக்குச் சபை 9 மணிக்குக் கூடி 11 மணி வரையில் விவாதம் வைத்துக் கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது அடிக்கிற புயலை விட பயங்கரமான புயல்கள் அடிக்கின்றன. உணவுப் பிரச்னை முக்கியமான பிரச்னை. அதைப்பற்றி விவாதிக்க வேண்டும். ஆகையால், 9-ம் தேதியை ' நான்-அபிஷியல் டே ' ஆக வைக்க வேண்டும், அதற்கு பிஸினஸ் அட்வைசரி கூடி முடிவு எடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான்-அஃபிஷியல் டே என்றால் இரண்டு மணி வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறேன். இதற்கு ஒன்றும் ஆத்திரப்பட வேண்டியதில்லை. இன்றைக்கு இரண்டு மணிநேரம் குறைந்தது. இந்த இரண்டு மணியை 9-ம் தேதி வைத்துக் கொள்ளலாம் என்று தான் சொல்லுகிறேன்.

3rd November 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, 9-ம் தேதி இந்த விவாதத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிற காரணத்தினால், நாள் முழுவதும் விவாதம் வைத்துக்கொள்ளுவதால் வேறு ஒன்றும் வீணான சூழ்நிலை ஏற்பட்டு விடாது. இதற்கு முன்னால் பல தடவைகள் அதிகாரபூர்வமற்ற நாட்களை நாங்களாகவே விட்டுக் கொடுத்திருக்கிறோம். இரண்டு மணி நேரம் அதிகமாக விவாதிக்க கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். இதுதான் கடைசிக் கூட்டமாக இருப்பதால் எல்லாவற்றையும் விவாதிக்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, சப்ளிமெண்ட்டரி டிமாண்ட்ஸில் பேசலாம் என்று சொன்னேன். இன்றைக்கு 1-30 மணி வரையில் வைத்துக் கொள்ளுவதில் எனக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லை. இப்போது ஒத்தி வைப்பதால் இரண்டு மணி நேரம் குறைகிறது. 9-ம் தேதி வேறு வேலைகளெல்லாம் இருக்கின்றன. ஆகையால் தான் இன்றைக்குக் குறைவதை அன்றைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன். அதோடு கூட சப்ளிமெண்ட்டரி டிமாண்ட் போது கூட பேசலாம்.

கனம் சபாநாயகர் : அதோடு கனம் அங்கத்தினர் அழகமுத்து அவர்களின் 57-வது விதியின் கீழான நோட்டீஸ் கூட இருக்கிறது. அதையும் வைத்துக்கொள்ளலாம்.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

11–39 p.m.

233. *Notification issued with G.O. Ms. No.* 951, *Education, dated the* 8*th June* 1966, *approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Sivakasi Municipal Council.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Parks, Play-fields and Open Spaces* (*Preservation and Regulation*) *Act,* 1959 (*Madras Act* 26 *of* 1959).]

234. *Notification issued with Memorandum No.* 40038 *T*1/66–2, *Revenue, dated the* 16*th July* 1966, *making certain amendments to the Revenue Department Notification II*-1 *No.* 863 *of* 1965, *dated the* 22*nd February* 1965, *published at pages* 352–354 *of Part II—Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 24*th February* 1965. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari Act,* 1963 (*Madras Act* 30 *of* 1963).]

235. *Notification issued with G.O. Ms. No.* 2029, *Revenue, dated the* 8*th June* 1966, *regarding the Leasehold villages notified and taken over under section* 1 (3) *of the Madras Leaseholds* (*Abolition and Conversion into Ryotwari*) *Act,* 1963 *in Harur taluk,*